1975 ஏப்ரல் 3]

இருக்கின்றன. சிமெண்ட் பற்றுக்குறை, செங்கல் பற்றுக்குறை இருக்கிறது. அவைகள் இருந்தாலும் இந்த வீடுகளை அதிகமாக கட்டிக் கொண்டிருக்கிறோம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் ச. மு. பழனியப்பன்: கட்டுகின்ற நேரத்தில் சிறு நகரங்கள், கிராமங்களில் கட்டுவதில்லை. அங்கே கட்டுவதற்கு அரசு முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: சிறு நகரங்களுக்கு கூட இதில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருக்கிறது. தாலுக்கா தலைநகரங்களில் பல இடங்களில் இப்படிப்பட்ட வீடுகள்—நாமக்கல்லில் இப்போது வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. தர்மபுரியில், தஞ்சாவூரில், சில மாவட்டங்களில் நெசவாளர்களுக்கு இப்படிப்பட்ட வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன—கட்டப்படுகின்றன. ஆகவே பல ஊர்களில் இப்படிப்பட்ட வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: இந்த மலிவு வீடுகள் கட்டுவதில் பின்தங்கியவர்களுக்கு ஏதாவது முன் உரிமை உண்டா? அப்படியானால் எந்தெந்த பின்தங்கிய சமூகத்தினருக்கு இந்த வீடுகள் கட்டி முடிக்க திட்டமிடப்பட்டிருக்கிறது? இதற்கான முறை என்ன? எந்த அடிப்படையில் அவர்களுக்கு கட்டிக் கொடுக்கப்படுகிறது? எவ்வளவு பணம் கட்ட வேண்டும், அரசாங்கம் எவ்வளவு மானியம், எவ்வளவு கடன் தருகிறது என்ற விவரம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: வீட்டு வசதி வாரியத்தைப் பொறுத்தவரையில் வீடு என்பது சொத்து. மானியத்திற்கு இதில் இடம் கிடையாது. 13,000-க்கு வீடு கட்டிக் கொடுக்கப்படுகிறது. இதில் முக்கிய அம்சம் என்னவென்றால் 10 சதவிகிதம் முன் பணம் செலுத்தி விட்டால் போதும். 13 ஆயிரம் என்றால் 1,300 முன்பணம் செலுத்த வேண்டும். மற்ற வீடுகளுக்கு 13 ஆயிரத்திற்கு மேல் இருக்கிற வீடுகளுக்கு 12½ சதவிகிதம் சென்டேஜ் சார்ஜ் வீட்டு வசதி வாரியம் வசூலிக்கிறது. இது குறைந்த வருவாய் உள்ளவர்களாக இருந்தால் 6¼ சதவிகிதம் சென்டேஜ் வசூலிக்கிறது. இந்த வீடுகள் குறைந்த வருமானம் ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 4,200 வருமானம் உள்ளவர்களுக்குத்